சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 13.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 6/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | சக்திபாலன் |
| தந்தை பெயர் | : | முருகேசன் |
| கிராமம் | : | கீழ்வேளூர் |
| தாலுக்கா | : | நாகப்பட்டினம் |
| தொழில் | : | உதவி பேராசிரியர்,<br>மருத்துவம் |
| வயது | : | 38 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூரில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.09.2022 ஆம் தேதி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரவு 9.00 மணியளவில் பணி மருத்துவராக இருந்தேன். அன்றைய தினம் சிகிச்சைக்காக புதுக்குடி கிராமம், முருகானந்தம் என்பவரின் மகன் சுமார் 26 வயது மதிக்கத்தக்க ஆனந்த் என்பவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவரை நான் சிகிச்சை அளிக்கும் பொருட்டு பரிசோதனை செய்தேன். அவர் என்னிடம் தன்னை தெரிந்த ஒரு நபர் இரும்பு கம்பியால் அதே நாளில் இரவு 7.30 மணியளவில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு வலது தலையில் 6x2x1/2 செ.மீ கிழிந்த காயமும், வலது நெற்றியில் 5x2x1/2 செ.மீ கிழிந்த காயமும் இருந்தது, வலது கையில் வலி இருப்பதாக கூறினார். மேற்கூறிய காயங்களுக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று காயச்சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயச்சான்று நான் வழங்கிய காயச்சான்று தான். அந்த காயச்சான்று **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

வலி இல்லாமலே வலி இருப்பதாக ஒருவர் சொல்லலாம் என்றால் சொல்லலாம். நான் அ.சா-1 ஆனந்த் என்பவருக்கு சிகிச்சை அளித்ததை காட்ட அ.சா.ஆ-6 ஆன காயச்சான்றிதழ் மட்டும் தான் முன்னிலை படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் வழங்கிய அ.சா.ஆ-6 இந்த ஆனந்த் என்பவருக்கு உடலில் எங்கு காயங்கள் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். அ.சா-1 ஆனந்த்-க்கு இருந்தாக

சொல்லப்படும் காயங்கள் சாலை விபத்தினால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M Digitally signed by VADIVEL M Date: 2025.10.13 14:27:31 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.